# பிரேம தியானம்




விஜயேந்திரன்

Pandit S. P. Sharma
Secretary
15 FEB 1972

# பிரேமதியானம்

(உணர்வுச் சித்திரம்)

**விஜயேந்திரன்**

(ஆசிரியர் ''வைகறை'' இலக்கிய இதழ்)

பிரசுரம்:
**நாம் இலங்கையர் இயக்கம்**
**சண்டிருப்பாய்**

பிரதிகள் கிடைக்குமிடங்கள்;
**விஜயலட்சுமி புத்தகசாலை**
248 காலி வீதி வெள்ளவத்தை,
கொழும்பு. 6

**கிருஷ்ணசாமி**
புத்தக விற்பனையாளர்
யாழ்ப்பாணம்.

**ரகுநாதன் புத்தகப்பண்ணை**
கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

**விலை-/ 75**

## சிலவார்த்தைகள்!

இலக்கியத்தேன் மாந்திட என்றுமே ஆர்வமுடன் காத்திருக்கின்ற தரமான ரசிகர்களின் கைகளிலே, சொற்சாதுர்யமும், பொருள்வளமும், கம்பீரமான நடையழகும் மிக்க ''பிரேமதியானம்'' என்ற இலக்கியத் தேன் கலசத்தை வைக்கிறோம்.

இந் நூலாசிரியர் திரு. விஜயேந்திரன் அவர்கள், உங்களுக்குப் புதியவரல்லர்.

அவர் ஏற்கனவே எழுதிவெளியிட்ட 'விஜயேந்திரன் கவிதைகள்' நூலும், 'அவள்' நாவலும், ''அண்ணா என்றொரு மானிடன்'' அஞ்சலி நூலும், 'சௌந்தர்ய பூஜை' சிறுகதைத் தொகுதியும் அவரது ஆழமான எழுத்தாற்றலை உங்களுக்குஉணர்த்தி விட்டது.

விஜயேந்திரனின் ''வைகறை'' இலக்கிய இதழ் அவரது நெஞ்சுரத்தையும், எழுத்தாண்மையையும் தெட்டத் தெளிவாக விளக்கிவிட்டது.

எவருக்கும் வால்பிடிக்காது, யார் தயவுக்கும் காத்திராது 'இலக்கியமே உயிர் மூச்சு' எனச் செயற்படுபவர் அவர்.

அத்தகைய கலாவிற்பன்னரின் 'பிரேமதியானத்தை' பெருமையோடு வெளியிடுகிறோம்.

-ராஜ்குமார்

முதற்பதிப்பு
1971 டிசம்பர்

பிரசுரம்
நாம் இலங்கையர்
இயக்கம்
சண்டிருப்பாய்

உரிமை
ஆசிரியருக்கு

ஆசிரியரின்
பிறநூல்கள்:

1. விஜயேந்திரன் கவிதைகள்
2. ''அவள்'' (நாவல்)
3. அண்ணா என்றொரு மானிடன் (அஞ்சலி நூல்)
4. சௌந்தர்ய பூஜை (சிறுகதைகள்)

அச்சுப்பதிவு;
திருச்செல்வி அச்சகம்
தட்டாதெரு
யாழ்ப்பாணம்.

# முன்னுரை

எனது வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்தையும் இலக்கியத் தெய்வத்தின் மோகன கோயில் முற்றத்திலே, அவளது திவ்யகருணை காந்தியிலே கழிப்பதனையே யான் முற்றாக விழைகிறேன்.

இலக்கிய பணிக்கே என் காலம்; அப்பணியே என் இதயத்துக்கு சாந்தியைத் தருகிறது.

இதோ எனது ஐந்தாவது இலக்கியப் படைப்பான ''பிரேமதியானம்.''

உணர்வுக்கடலில் யான் மூழ்கிப் பெற்ற இச் சிறிய சுடர் முத்தினை உங்கள் ரசனுபாவத்தின் அளவு கோல்கள் மூலமாக அளந்திடுங்கள்.

இந் நூல் வெளிவருவதற்கு எனது பெருமதிப்புக்குரியவரான சண்டிருப்பாய் ஐ குமாரசாமி அவர்களும், எனது தோழன் திரு. பொ. சிவபாஸ்கரன் என்பவரும் மிகவும் உறுதுணையாக அமைந்தார்கள் அவர்களுக்கும், எனது இப்படைப்பு நூலுருவாக வேண்டுமென ஆர்வம் காட்டியதோடு மட்டும் அமையாது, ''நாம் இலங்கையர் இயக்க'' வெளியீடாக பிரசுரம் செய்யவும் முன் வந்த எனது நெருங்கிய நண்பர்களான திருவாளர்கள். கு. விநோதன், ஐ. ராசரத்தினம் ஆகியோருக்கும் என் இதய பூர்வமான நன்றியைச் சொல்லுகிறேன்.

'வைகறை அலுவலகம்''
வடக்கு வீதி,
மாவிட்டபுரம்.

விஜயேந்திரன்

# காணிக்கை

## கவிஞர் கம்பதாஸனுக்கு!

பாரதிக்குப்பின் பாட்டிசைத்தவர்களில் ச. து. சு. யோகி யாரின் கவிதைகளின் காம்பீர்யம் என்னைக்கவர்ந்தது.

'கலைவாணன்' கவிதைகளின் சொற்சரளம் என்னை மகிழ்வித்தது.

'பாரதிதாஸன்' பாடல்களில் அவரது முற்பகுதி பாடல்கள் நளினம் மிக்கன; அவற்றில் நான் சொக்கினேன்.

கம்பதாஸன் கவிதைகளோ உணர்ச்சிமிக்கவை; புதிய கற்பனைவளம் பொதிந்தவை.

என்னைக் கவர்ந்த கவிஞர்களில் ஒருவரான கம்பதாஸனுக்கு இந்நூலை மனமுவந்து காணிக்கை செய்கிறேன்.

இன்று சென்னையிலே, வறுமையோடு போராடிக் கொண்டிருக்கின்ற அந்த உண்மைக் கலைஞனைத் தமிழ் இலக்கிய உலகம் கௌரவிக்க முன்வரவேண்டும் என்று பணிவன்போடு வேண்டுகிறேன்.

விஜயேந்திரன்

# பிரேமதியானம்

என் இதய விதானத்தே பொன் உஷையாய் பொலி கின்ற காதற் தேவதையே!

கண்ணீர்ப் பெருங்கடலில் என் ஆத்மாவை துரும் பென அலைந்திட வைத்துவிட்டு நீ வெகுதூரம் போய் விட்டாய்.

என் வாழ்வில் உன் பிரேமை ஒரு முடிவற்ற இன்ப வஸந்தம் என யான் நம்பினேன்.

உன் ஒருத்தியின் அன்பிற்காக இந்த உலகினையே புறக்கணித்திட சித்தமானேன்.

என் அன்பிற்குரிய நண்பர்களையும், உறவென எனக் கிருந்த அனைவரையுமே உன் காதலுக்கு அவர்கள் தடை யாய் நின்றதன் காரணமாக வெறுத்தொதுக்கினேன்.

ஆனால் நீ?

என்னையே மறந்துவிட்டாய்! இனி என் வாழ்விலே நிம்மதியே கிடைக்கப் போவதில்லை.

உயரிய மலையொன்றிலிருந்து பாதாளம் நோக்கி உருட் டிவிடப்பட்ட கற்பாறைபோல பயங்கர முடிவினை நோக்கி என் நாட்கள் விரைந்து கொண்டிருக்கிறது

என் காலம் வெகுவிரைவில் நிறைவெய்திவிடும்.

எனினும் நீதந்த உறவும் உன் பிரேமையின் சின்னங் களாய் என் நெஞ்சிற் பதிந்து நட்சத்திர ஜோதி வீசு

கின்ற இறந்த காலத்தின் மாதுர்யமான ஞாபகங்களும் சதா என்னை வாட்டிய வண்ணமே இருக்கின்றன.

நீ என்னை நிர்க்கதியான நிலைக்குள்ளாக்கி விட்ட போதும் எனது நெஞ்சம் தெய்வீகமான பிரேமையைத் தியானித்தவாறே இருக்கின்றது.

எனது தியான பாஷை உன் காதுகளுக்கு எட்டாது போனாலும் உயர் காதலின் மேன்மையினை உணரத்தக்க வர்களுக்காவது எட்டுமல்லவா?

★

அன்பே!

உன் ஞாபக பைசாசத்தின் இரைச்சலின் முன்னிலையில் நானோர் செவிடாக இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?

தேனூறுந் தமிழின்பச் சுவையாகவும், தெவிட்டாத அமிழ்தாகவும் உன்னை நான் கருதினேன்.

உன் உறவை சாஸ்வத மானதென நான் எதிர்பார் த்து, ''காதலே வாழ்வெனும்'' மதுர கீதம் இசைத்தேன் இன்று திக்கற்ற ஒரு தெருப்பிச்சைக்காரப் பாடகன் நிலை யிலே நின்று கொண்டு ''கானலே காதலடா'' என்ற சோக கீதம் இசைக்கின்றேன்.

★

என் இன்பக் கண்மணியே! பரந்த இந்த பிரபஞ்ச மேடையில் உன்னை நான் கண்டேன். என்னை நீ கண்டாய். நாமிருவரும் பிரேம வானிலே சுகானந்த கீதங்கள் பாடிப் பறவைகளாய்ப் பறந்து திரிந்தோம்.

யாவுமே பொய்த்தன; உன் உறவினர் தீயென எழுந் திட என்னை மறந்துவிட்டு நீ அவர்கள் பக்கம் போய்

விட்டாய் அன்பின் ஒரு தெய்வமாய் உன்னை நம்பியிருந்த நான், விம்மும் நெஞ்சோடும், பெருமூச்சின் துணையோடும் சூன்யத்தினை வழிபாடு செய்கின்ற விநோத பக்தனாய் இருக்கின்றேன்.

★

பிரேமை உலகின் மகாராணியே!

திக்குவாய்க்காரன் கீர்த்தனையாக என் காதல் மரணா வஸ்தைப் படுகின்றது.

இறப்பே வந்தணையும் தருணத்திலும் ''ஏ பகவானே! மோட்சராஜ்யத்தில் என்னையொரு பிரஜையாக இருக்கும்படி அருள் செய்வாய்'' என நான் தியானம் செய்ய மாட்டேன்.

உன் காதலையே மரணப் படுக்கையிலும் நான் ஜெபம் செய்வேன்.

★

எனதன்பே!

உஷத்காலத்தின் உன்னதத்தைக் காட்டிவிட்டு, நாள்படகும்மிருட்டாய் போய்விடுகின்ற காதல் என்பது கனவாம் சுடரினைச் சுற்றிச்சாகும் விட்டில் தானே?

★

என்விழிநீர்த்துளிகள், உன்பால் மிகுந்து பொங்கும் என்இதயத்து ஆவேசக் காதலின் காணிக்கையாக இறந்துபட்ட உன் காதலின், இறவாத ஞாபகங்களுக்கு அர்ப்பணம் செய்யப்படுகின்ற நிவேதனப் பூக்களாகும்.

என் பெருமூச்சு அநுராக உலகின் அமரகீதமாகும்,

★

எனதன்பே!

ராஜாங்கத்தாரால் ஊரடங்குச்சட்டம் போடப்பட்ட சந்தர்ப்பத்திலும்கூட உன் முகம் காணவேண்டுமென எழுந்திட்ட உத்வேகத்தினுல் உன் இல்லப்பாதை வழியாக எனது பழைய மிதிவண்டியில் மூன்று முறை நான் வட்டமிட்டேன்.

இன்னுமொரு சமயம் பயங்கரமான புயலும், பேய் மழையும் போட்டியிட்டு போர் செய்ததினையயும் பொருட்படுத்தாது உன் முகம்காண ஓடிவந்தேன்.

உன்னை ஒருநாள் பிரிய நேரிட்டாலும்கூட என் ஆனந்த கனவுலகிற்கு பிரளயம் நேர்ந்து விட்டதாகவே நான் முன்பு நினைத்தேன். இப்போதோ ஒன்ருகவே - முற்ருகவே நீ என்னைப் பிரிந்துபோய் விட்டாய். உன் துரோகம் தந்த அதிர்ச்சியினின்று எப்படித்தான் நான் மீள்வதோ?

★

என் சொப்பனங்களுக்கு உன் நினைவே தாயாகிறது; 'எம் காதல் எம்மிருவருடைய நம்பிக்கையின் அத்திவாரத்திலே எமதன்பு என்ற பளிங்கினுல் தெய்வத்தால் கட்டப்பட்ட இரண்டாவது ''தாஜ்மஹால்'' என நீ வருணித்தாய்! அடிப்பாவி! அத்தகைய சிங்கார மண்டபத்தை நீ ஏனடி தரைமட்டமாக்கி விட்டாய்?

காதல் ஒரு சொர்ண வீணையை நிகர்த்ததல்லவா? அந்த நேர்த்தியான எழில் வீணையை ஏனடி புவிமாந்தர் கைகொட்டி நகையாடும்வண்ணம் தெருமீது நலங்கெட வீசிவிட்டாய்?

பிரியகாதலியே!

நினைவின் பின்னணியில் எழுகின்ற காதல் ராகங்கள் உன் ஆத்மாவை பைத்தியம் பிடிக்கச் செய்கின்றது; எனது வாழ்வு ஒரு சித்திரவதையாகத்தான் எனக்கிருக்கிறது.

உன் ஞாபகங்களால் நான் எழுப்பிய அழகுக் கோபுரம் சாய்ந்தே போய்விட்டது: பஞ்சுபோன்ற என் இதயத்திலே உன் காதல் பிரிவு தீயென தகிக்கின்ற தன்மையினால் நான் எல்லையற்ற நரகவழி பயணியாகி விட்டேன்

இனிமரணத்தை நோக்கி வரவேற்புக் கீதம் பாடுவதைத் தவிர இந்த பாவியால் வேறென்னதான் செய்யமுடியும்?

★

காதல் ஓர் அழகிய வெள்ளை ரோஜா; அதன் மதுவினை மாந்திட நினைந்து என் ஆத்மா துடிதுடித்து நின்றது.

ஐயையோ! உலகம் என்ற மலம்வாழ்பன்றி யாவற்றையும் பரிநாசம் செய்துவிட்டதே!

★

அன்புக் காதலியே!

ஒரு இன்பகரமான மாலைப் போதிலே நீயும் நானும் அருகருகமர்ந்து உல்லாஸ மாளிகைக்குப் போனோம் அங்கே நானும் நீயும் முதன் முதலாக அற்புதமான லீலை தனிலே உயிரோடு, உயிரும், உடலோடு உடலும் ஒன்றாக கலந்திட நின்றோம்

அந்த இன்ப நாளின் ஞாபகம் இன்றும் என் நெஞ்சில் மோகனராகங்களை இசைக்குதடி.

அற்புதமான அத்தகைய அநுபவங்கள் எட்டத்து சுடர்வெள்ளியாய் போய்விட்டதனை எண்ணி அண்ட சராசங்களுக்கும் அப்பாலே கேட்கும்படியாக நீண்ட யுகங்களின் இதயங்களிலும் நீங்காத தாக்கம்

ஏற்படுத்தும் விதத்திலே ''ஐயோ! எனக் கத்த வேண்டும் போல் எனக்கு ஒரு வெறியே எழுகிறதடி.

★

உணர்வு யாழின் பருவ நரம்புகளை ஆசையின் கைகள் தடவும்போது பிரேமையின் நாதம் எழுந்தது. அன்றே என் வாழ்வு புதைகுழி சவமானது.

★

எனதன்பே!

உன் நினைவின் மது மாந்தி, துயிலின் துணையின்றி நிராசைக் கனவில் காலூன்றி உழல்கின்றேன்.

எனதாத்மா சோக சமுத்திரத்தில் நீந்திப்போகின்றது

என் மானஸ தெய்வமே! காதல் வானின் ஜோதி நிலவே;எனதாத்மாவை கருகிச்சாம்பலாகும்படியாகசெய்துவிட்டு விஷ ஜந்துக்களைப் போல் எம் காதல் வாழ்வினில் வந்த உன் உறவுக் காரரின் பக்கம் நீ சாய்ந்தது ஏனென்றே எனக்குப் புரியவில்லை.

நீயும் நானும் எத்தனைமுறை பாஷையே அநாவசியம் என்றமையும் உணர்வுலகிலே உயிர் கலந்து போயிருக்கிறோம்.

அவற்றை எல்லாம் அடிக் கல்நெஞ்சுக்காரியே! என் வாழ்வைப் பாலையாக்கிய அழகுப் பிசாசே! நீ எப்படி யடி மறந்து போனாய்?

★

முதல் சந்திப்பிலேயே நீ என்னை வெற்றிகொண்டாய் உன அழகின் கண்கள் என்னைப் பார்த்திட்ட சுவை போதில் ஓர் இன்ப உலகமே என் முன் விரிந்தது

அடி லாவண்யத் தேவதையே! அன்றே நீஎன் கனவின் வாயிலானுய்; என் உள்ளத்திலே அநுராக ஓவியத்தைத் தீட்டி உனது பற்றுள்ள அடிமையாக மாற்றிவிட்டாய்.

★

அடிப்பெண்ணே!

எனக்கு நீ எத்தனையோ கடிதங்கள் தீட்டினுய். நானும் கணக்கற்ற கடிதங்கள் உனக்கெழுதினேன். அந்த கடிதங்கள் மூலமாக எத்தனை எத்தனையோ லலிதகளுக்கள் கண்டோம். எம் வாழ்வு இன்ப சாகரமாக இருக்க வேண்டுமென பரஸ்பரம் நாம் பகவானைப் பிராத்தித்துக் கொண்டோம். ஐயோ! அத்தனை எண்ணங்களும் மனக்கோட்டையாய், மணல் வீடாய் போய்விட்டதே!

★

அமுதக் காதலியே!

சென்ற ஆண்டின் அந்திப் பொழுதொன்றிலே உன் முன் அறிவிப்பின்பிரகாரம் நின் வரவெண்ணி நானும் அன்புத் தோழன் ஒருவனுமாய் நீ குறிப்பிட்ட ஒற்றையடிப் பாதையிலே காத்து நின்ருேம்.

குறித்த நேரத்தே நீ வராதபடியால் நீ என்னை ஏய்த்து விட்டாய் என்று எண்ணியவனுய் 'வா போவோம்' என என் நண்பனேடு வீடுதிரும்பிட முயன்றேன்.

அது போழ்து,

ஒண் கனவின் சித்திரமென, நிலவாம் நகைசிந்தி நீ வந்தாய்.

அற்புதமான அந்த இன்ப நாளை நினைக்கையிலே என் நெஞ்சு துடித்துப் போகுதடி.

★

எம் காதலை ஆனந்தத்தின் பல வகைப்புஷ்பங்கள் பூத்துக் குலுங்கிடும் சுகப் பூங்காவாக நான் எண்ணி னேன்.

அது பொய்யே!

எம் காதல் சூன்ய தீமேடை; பயனில விழல்; இரத் தக் காட்டேரி.

ஆசை, கண்ணீர் இவற்றின் குழவியே மானிடர் காதல் இந்தப் பேருண்மையை அநுப தேவனே எனக்கருளினான்.

என் இன்பக் காதலியே!

எம்மங்கள பிரேமை எம் இருவர் கனவிற் கனிந்தது; இன்றோ பிரிவின் கொடுவாளால் சிதறுண்டு போனது.

இன்னமுஞ் சொல்லப் போனால் எம் காதல் பருவ நெருப்பில் ஜனித்த ரோஜா; அது காலப் பேயின் கையிற் சிக்கி உதிர்சருகாய்ப் போய்விட்டது. பிரிவென்னும் பெருங் காற்றிற் பறந்தே போய்விட்டது.

நீ என் வாழ்வையே மாற்றி, கோடி ஜென்மங்களி லும் உன்னை மறக்க முடியாத வண்ணமாக நெருங்கிப் பழகி, இன்று என் உறவினை முறித்துக் கொண்டதனை எண்ணும்போது, அநியாயமாக உனது உறவினரின் பயமு றுத்தலுக்காக என் மானஸீகமான காதலை புறக்கணித் ததினை கருதுங்கால் என் நெஞ்சே வெடித்து விடும்போல் இன்னல் எழுகிறது!

என் உள்உணர்விலே உன் பேரழகு ரூபம் ஒரு இன் பச் சித்திரமாய் பதிந்து விட்டது.

சுடர்பெய்கின்ற நட்சத்திரத்தினைப் போன்ற ரமணீகரத் தோற்றத்தினளே!

பூமாதேவியின் உதரத்தே உற்பவமான காவியக் கன்னியே!

அழகென்ற மாபெரும் சாம்ராஜ்யத்தின் மணிக்கதவங்கள் போல் பொலிகின்ற சுந்தர விழிகளைக் கொண்ட இதயரதியே!

உன் இதழ் ஓரத்துப் புன்னகையில் சொர்க்கத்தின் இன்ப ரகசியங்களை யான் கண்டுகொண்டேன்!

எனதன்பே!

உன் அழகுதான் எத்துணை மேம்பாடுடையது?

அது கலாதேவியின் தெய்விக சௌந்தர்யம்!

என் இதயத்தை பித்தின் எல்லைக்குக் கூட்டிச்சென்ற கீர்த்திமிக்க மந்திரக்கோல்.

இனியென்ன?

எல்லாமே ஏமாற்றமாக போய்விட்டது.

அடிவஞ்சகியே!

நீ ஏனடி என்னை மறந்து போனாய்?

★

உன்காதல் ஆழப் புண்ணாய் என்நெஞ்சினை ஆக்கிவிட்டது; ஞாபகங்கள் என்னும் ஈக்கள் அதினை மொய்த்து வதைக்கும்போது நேர்கின்ற இம்சையினை இனி எவரே தணிக்கவல்லார்?

★

முன்பொரு மடலில் தீட்டியிருந்தாய்.

“எம் காதலுக்கு யார் குழிதோண்டுகிறார்களோ, நிச்சயமாக அவர்கள்தான் அந்தக் குழியில் விழுவார்கள்” என்று.

எனதன்பே!

நடந்ததென்ன? எம் காதலுக்குத் தோண்டப்பட்ட சவக்குழியில் காதல் வைரிகளோடு சேர்ந்து நீயே என்னை வீழ்த்திவிட்டாய்.

காதலென்ற கோமேதகத்தை உனது உறவுக்கார மூர்க்கர்களுக்கஞ்சி தூக்கி வீசிவிட்டாய்.

★

அன்பே!

என் இதய கோபுரத்தே தெய்வமென உன்னையல்லவா பூஜித்தேன்.

அன்பின் கனவிற் கனிந்த தெய்வமே!

நெஞ்சக் கொடியில் பூத்த சுகந்த மல்லிகையே!

உறவின் ஏட்டின் அழியாப்பொருளே!

வேனிற் தென்றலே!

விளங்கும் மரகதமே!

இப்படி எல்லாம் உன்னை அழைத்து நெஞ்சு குளிர்ந்த என்னை நீ ஏனடி நிம்மதியறச் செய்து புதிர்க்கூண்டில் கைதியாக நிற்கவைத்து வாதை புரிகிறாய்.

★

என் காதலியே!

என்வாழ்வின் கனவுகள் பூஜ்யமாகி விட்டன!

என் உள்ளத்திலே சூன்யத்தின் ராஜாங்கம் உருவாகி விட்டது.

உன்னோடு இணைந்திருந்த நாட்களில் இந்த உலகினை ஒரு ஆனந்த புரியாக நான் நினைத்தேன்!

நிச்சயமாக இவ்வுலகு ஆனந்தபுரியல்ல, கொடு நரகம் என்பதனைக் காலம் நிரூபித்து விட்டது.

★

எனது இதயப் பேராழியின் ஆணி முத்ததென மின்னிடும் பேரெழிலே

நேற்றுவரை என்னிரு செவிதனில் மனோகரகீதங்கள் இசைத்திடும் மதுகரமென சுழன்றனை; இன்றோ விழி வெடித்த கண்ணீர்த்திவலைகள் உதிர்கின்ற தாரகைகளைப் போல கன்னம் வழிவீழ, என்றனை ஏகாங்கியாய் விட்டு விட்டுபோய்விட்டாயே! ஐயோ நான் என்செய்குவேன்?

எனதாத்மா பெருமூச்சாம் படகேறி கரையற்ற உனது ஞாபக சாகரத்தே உலவித்திரிகிறதடி.

★

என் இன்பக்கிளியே!

உன் எழில் என்னும் விஷம் மாந்தியதால் என் வாழ்வு இருளடையுமாறு நேர்ந்துவிட்டது.

உள்ளுணர்விலே கட்டுப்படுத்த முடியாத தவிப்பொன்று ராகமிசைத்திட உன்ஞாபக சாகரத்திலேயே நான் மீட்டும் மீட்டும் மூழ்கி எழுகிறேன்.

★

அடி அன்பே!

மேகவர்ண ரதந்தன்னில் நீ சென்ற பொழுது களையும், வசீகர வடிவினளாக நீயிருந்து, உனது

கொல் வேல் விழிகளால் என்னைப்பார்த்து சென்ற காட்சிகளையும் நான் அசைபோடுகிறேன்.

ஆ! அந்த ஆனந்தப் பொழுதுகள் இந்த ஜென்மத்தில் என்வாழ்வில் மீண்டும் கிடைக்கவே மாட்டாதல்லவா?

★

உனது முதற் கடிதம் என் கைக்கு எட்டியபோது நான் சிறுபிள்ளைபோற் குதூகலித்தேனடி.

கொச்சையான பாஷைச் சிதறல்கள் ஆங்காங்கே சிதறிக்கிடந்த போதும், கம்பனையும், பாரதியையும், ச. து. சு. யோகியையும், புதுமைப்பித்தனையும், லா. சா. ராவையும் எப்படி ரசித்துப் படித்தேனோ அப்படியே உன்கடிதத்தையும் படித்தேன்.

மகத்தான கலா மேதைகளின் படைப்புக்களுக்கு மட்டுமல்ல, அழகிய இளம்பெண்ணொருத்தியின் சாதாரண சொல் ஆளுகைகளும்கூட வாசகனின் இதயத்தைஈர்த்திட வைக்கும் சக்தி உடையது என்பதனை நான் உன்னிடத்திருந்தேஉணர்ந்தேன்.

உன் கடிதத்திற்கு நான் எழுதிய பதில் கடிதத்தை கவிதை வடிவிலேயே நான் வடித்திருந்தேன்.

முன்போ நான்,

ஒவ்வொரு மனிதனுக்கும் எனக்குக் கிடைத்ததுபோல ஒருகாதலி கிடைப்பாளாக இருந்தால் கவிஞர்கள் ராஜ்யமே இந்தப் பூமியில் நடக்கும் என நினைத்தேன்.

ஆனால் இப்போதோ,
உன்னாற்கிடைத்த பேரிடிகளின் நிமித்தம், உன்னைப் போலொருகாதலிமற்றையஆண்களுக்குக்கிடைப்பார்களேயானால் ஆண்வர்க்கமே என்னைப்போல நெஞ்சொடிந்து போய்விட நேர்ந்திடுமே என அஞ்சுகிறேன்.

காதலியே!

என் இதயக்கன்னி அழுகைப்பாட்டிசைக்கிறுள்'

என் வரையிலே உன் காதல் என்ற பெருஞ் சேற்றில் சிக்காதிருந்திருப்பேஞயின் மனே சாந்தியாவது எஞ்சியிருந்திருக்கும்!

என்செய்வது? எல்லாம் விதியின் கொடுலீலைதானே?

நிகழ்காலத்தில் முடிவிலா சூன்யமே என் இலக்காக அமையும்படி ஆகிவிட்டதே.

ஏ இறைவனே! நீயாவது இந்த வாழ்க்கை மையிருளில் வாடுகிற எனக்கு, சாவெனும் ஜோதி வீட்டினைக் காண்பித்திட மாட்டாயோ?

படுமுட்டாள்த்தனமாக பெண்ணொருத்தி பாலுண்டு பெரிய ஸ்வர்க்கம், என எதிர்பார்த்து, பரிசுத்த சுகிர்த மல்லிகையான என் வாழ்வினை பெண்பிரீதியாம் பெரு நெருப்பிலிட்டழிந்து விட்டேனே!

ஐயோ! இந்தப் பெண் வர்க்கமே அழிந்து போகக் கூடாதா?

★

எனதன்பே!

அந் நாட்களில் நீ எனக்கு எத்தனை சத்தியங்களைச் செய்திருக்கிறுய்?

உன் உறவினரின் எதிர்ப்பினை தூசெனப் புகன்றாய்.

உனது தாய், தந்தையர்கள் யமனைக் காட்டிலும் பயங்கரமானவர்கள் என்றும் உன் உயிரே போனுலும் அந்த மூர்க்கர்களுக்கு எங்கள் உண்மை காதலை பலியிட மாட்டேன் என்றும் சொன்னுய்.

நடந்ததென்ன?

எம்காதல் விஷயம் அம்பலத்துக்குவர என்னைத் தனியாக்கிவிட்டு, நீ உன் உறவினரின் தலையாட்டிப் பொம்மையாகி விட்டாயே.

ஆ கடவுளே! என்மனம் அக்கினிபோல் எரிகிறதே!

இனி நான் என் செய்வேன்? எங்கே சாந்தி காண்பேன்?

எனக்குத் தந்த வாக்குறுதிகளை எல்லாம் காலைப்பரிதிமுன் பனித் துளியாக்கிய ஜாலக்காரியே! என் கேள்விக்கு உன் பதிலென்ன?

★

அன்பே!

மதுரமான வேனிலின் வரவென்னும் சிறு பறவை ஒன்றின் இதயம்போல, என்நெஞ்சம் எம்காதல் அம்பலத்துக்கு வந்த நாட்தொட்டு உன்பதிலுக்காகக் காத்திருந்தது.

அடி மூர்க்கியே!

"என்னை மறந்துவிடுங்கள்; என் காலத்தை முடிவு செய்யும் பொறுப்பினை என் பெற்றோரிடமே திண்ணமான சிந்தனையின் பலனாக ஒப்படைக்க முடிவெடுத்து விட்டேன்"

என்ற கடிதத்தையல்லவா கொடுத்தனுப்பிவிட்டாய்.

சீ! உன்னை நம்பி என் வாழ்வையே குட்டிச்சுவராக்கி விட்டேன்!
என்னை மூடனாக்கியது நீயே!

என்னைப் பைத்தியக்காரனாக்கியது நீயே!

என் கீர்த்தியை, கல்விச் சிறப்பைக் கரியாக்கியது நீயே!

ஏ கடவுளே! நீயே முதல் துரோகி! நீ தானே என்னைப் படைத்தாய்?

★

என் மனோ அரவத்தை விரும்பியவண்ணம், உன் அழகு என்ற மகுடியால் ஆட்டிவைத்த கைகாரியே!

''இவள் என்றும் உங்கள் சொல்லுக்காய்க் காத்திருக்கும் அன்பின் சேவகி'' என்றாயே.

அத்தனையும் பொய்தானா?

உன்னைவிழைந்தகுற்றத்திற்காகவா இந்தத் தண்டனை?

''காதல் புரியாதவரை ஒருவன் மகிழ்ச்சியோடிருக்க முடியும்'' என்று ''டொரைன் கிரேயின் சித்திரம்', என்ற நாவலிலே ஆங்கில எழுத்து வேந்தன் ஒஸ்கார் வைல்ட் கூறியிருக்கிறான்.

''பூ போன்ற நெஞ்சினிலும் முள்ளிருக்கும் பூமியடா
பொல்லாத கண்களடா புன்னகையும் வேஷமடா''

என்று பல பெண்களின் உள்ளத்தைக் கண்ணதாஸன் அழகாகப் பாடியிருக்கிறார்.

கவிஞர் கம்பதாஸனோ,

''இடர் செய்யும் காதல் பாதை சென்றிடாதே
சுடர் போன்ற வாழ்வை பாழாக்கிடாதே''

என்று நயமுற பாடியிருக்கிறார்.

காதலைப்பற்றி, பெண் தொடர்பை பற்றி எல்லை காட்டமுடியாத நூல்களில் நான் கற்றிருக்கிறேன்.

எனது நண்பர்களின் துயரக் கதைகளில் தொண்ணூறு வீதமானவை இந்தக் காதல் கதைகள்தான்.

என்ன இருந்தென்ன?

அவனவன் அநுபவங்கள் தானே அவனவனுக்குப் புத்தி புகட்டுகிறது?

என் காதல் அனுபவங்களே எனக்கும் புத்தி புகட்டி விட்டது.

என்ன செய்வது? தீர்க்க தரிசனமற்ற அறிவிலியான நான், மாதொருத்தியின் நம்பிக்கை மின்னலிலே என் வாழ்வின் கவிபாட நினைத்தேன்; கருத்துக் குருடாகி, தோல்விச் சறுக்கலிலே சித்தமும் சோர்ந்து போய்விட்டேனே!

★

எனதன்பே,

உனது மென்ரோஜா கரம்பற்றி, உலகோரின் எதிர்ப்பெனும் சூழ் முட்களை ஒடித்தெறிந்திட துணிகையிலே, அடியே கொடும்பாவி! அம்முள்ளே எனைக் குத்தி என் ஆத்மாவை ரண மாக்கிட, நீமட்டும் எனைவிட்டு விலகிப் போனுயே!

அன்பே!

காதல் உலகத்து வாக்குறுதிகள் யாவுமே சத்திய வானிலே சுடர்கின்ற மீனங்கள் எனஉளம்பூரித்திருந்தேன்.

அப்படி நான் கருதியது மிகப்பெரிய தவறு என்பதனை நீ நிரூபித்துவிட்டாய்!

தையலர் நேச வேட்கை என்பது ஆண்களின் படு மோசமான ஒரு பலவீனமாகும்.

காதலை கானல்நீரோடும், மானிடரை அக்கானல் நீரினை விழைந்திட விரைந்து நெஞ்சு வெடித்து சாகின்ற மான்களோடும் உவமை செய்த மராட்டிய எழுத்தாளர் காண்டேகர் அற்புதமான மேதைதான்.

★

அன்பே,

உன்னை இரண்டாவது முறை ஏகாந்தம் ஆட்சிபுரிந்த சூழல் ஒன்றிலே சந்தித்தபோது மோகாவேசத்தோடு

உன் பிங் ரோஜா கன்னங்களில் என் பிரேமையின் சின்னங்களை பதித்தபடியே,

''நீ என்னை என்றும் மறந்துவிட மாட்டாயல்லவா? எனக் கேட்க,

''மரணமும் எம்மை பிரிக்க முடியாது; கடவுளும் எம்மை பிளவு செய்யமுடியாது'' எனச் சொன்னுயே!

இன்று ஏனடி இரக்கமற்ற பிசாசுபோல் மாறிவிட்டாய்?

எங்கள் நித்திலக் காதலை உன் சொந்தக்கார மர மண்டை ஆசாமிகளின் காலடிகளிலே மிதிபடவைத்து என் முகத்தில் கரிபூசி விட்டாயே?

உன் காதல் என் வாழ்வின் ரம்மியமான மணிக் கோயில் என்றிருந்தேன்.

நீ என் நம்பிக்கையை சாம்பல் மேடாக மாற்றிவிட்டாயே!

★

அன்பே!

உன் நினைவு என்நெஞ்சில் இருக்கிறது. இந்தக்காரணத்தால் நஞ்செனவேமுென்றை அருந்த வேண்டிய அவசியம் இல்லை அல்லவா?

நீ என்னைக் காதலித்தாய்.

துன்பம் என்றவார்த்தைக்கு எனக்கு அர்த்தம் அதன் மூலமாகத் தெரிந்தது,

நீ என் நெஞ்சினுட் புகுந்தாய்!

அன்றே என்நெஞ்சம் பிசாசின் அட்டகாசங்களுக்கு மேடையானது.

கடவுள் பிறர் உயிரை அளிக்க வேறுவழிகளை கையாளுகிறுன்.

ஆனால்?

என்னுயிரை அழிக்க அதுவும் கொடுஞ் சித்திரவதைப் படுத்தி அழிக்க உன்னைவிட ''நல்லவள்'' அவன் கண்களுக்குத் தென்படவில்லை போலும்?

என் காதலியே!

முன்பு ஒருசமயம் நான் நினைத்தேன்; கடவுள் உன் நெஞ்சினை அருண ஜோதியிலே குறுநகை செய்கின்ற அழகிய மலர்களாலும், கள்ளமற்ற குழந்தைகளின் இயல்புகளாலும்தான் உருவாக்கினான்'' என்று;

அது ஹிமாலயத் தவறு!

உன் இதயம் சைத்தானின் சாம்ராஜ்யம்!

இந்த உண்மையினை நான் உணரத்தவறி விட்டேனே?

✶

காதல் உலகம் 'கண்மூடித்தனம்' என்ற கர்த்தாவால் படைக்கப்பட்டது.

''தீர்க்கதரிசனமின்மை'' என்னும் மூடனே அவ்வுலகின் ராஜா.

காதலில் சிக்குண்டு சீரழிந்த பிற்பாடுதான் ''அநுபவம்' என்ற சற்குரு இவ்வுண்மையை எனக்குணர்த்தினான்.

# காதல்

நயனப் பூக்கள்
நான்கின் கலப்பில்,
இதயம் இரண்டின்
ஜோதிப் பிணைப்பில்,
தன்னிலை மறந்த
தண்மைப் போதில்
காதல் எனுமோர்
கவிதை பிறந்தது!

பூத்த காதலாம்
புதுமைக் கவிதை
கால இருட்டிற்
கருகி மாய
செய்வ தென்ன?
செத்திட விழையும்
எண்ணம் உந்திட
ஏக்கத் தாழ்ந்தேன்

வாழ்வின் நாட்கள்
வாட்டும் முட்கள்
இனியோர் ஜென்மம்
இருந்திடும் என்றால்
காதல் என்னைக்
கவரா வண்ணம்
பகவான் நீயே
பாலிப் பாயே.

## எமது அடுத்த வெளியீடு

# காதலென்ற தெய்வீகம்

(நாவல்)

⚜ அழகுத் தமிழின் இன்ப நடனம்
⚜ இனிய சம்பவங்களின் அற்புத கோர்ப்பு
⚜ இலக்கிய மணம் செறிந்த சந்தனக் கலசம்

"அவள்" நாவலை படைத்தவரின்

**இரண்டாவது நாவல்**

எழுதியவர்:

**"விஜயேந்திரன்"**

## மீண்டும் புலர்கிறது

கவியோகி சுத்தானந்த பாரதியார், டாக்டர் மு. வரதராசனார், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை போன்ற பேரறிஞர் பெருமக்களின் புகழுரைகளை, தரமான எழுத்தாளர், வாசகர் என்போரின் அபிமானத்தைப் பெற்ற,

# வைகறை

(இலக்கிய இதழ்)

★ போலி எழுத்தாளர்களின் முக மூடிகளைக் கிழித்தெறியும் அஞ்சாமை

★ மறுமலர்ச்சி இலக்கியத் தொண்டை வாழ் வாக்கியபீடு

★ ஆற்றல் மிக்க எழுத்தாளர்களை களத்திற்குக் கொணரும் உத்வேகம்

இத்தனை லட்சியங்களினதும் கருவூலமாக புலர்கிறது.

ஆசிரியர்:

**விஜயேந்திரன்**

எவ்வகை ரேடியோக்களாக இருந்தாலும் சரி.
குறைந்தசெலவில் ட்ரான்ஸிஸ்டராக
மாற்றுவதற்கும், மெயின் கரண்டாக
மாற்றுவதற்கும் எம்மிடம்
தொடர்பு கொள்க.

ரேடியோ மார்க்கோனி
வசாவிளான்.

RADIO MARCONI
VASAVILAN.

எங்கும் கிடைக்கும்! நீங்கள் விரும்பும்,
ஆனந்தா
திருக்குறட் கலண்டர்

அதிசிறந்த மசகிடு சேவைக்கு எம்மை
அணுகுங்கள்!
பரஸ்கோலுப்பிறிகேசன் சேவிஸ்
சுன்னாகம்.
PARASCOLUBRICATIAN SERVICE
CHUNNAKHM

HEAD OFFICE
NALLUR, JAFFNA.

விஞ்ஞான முறைப்படி ஆண்கள் - பெண்களுக்குரிய
உடைகள் வெட்டுவதற்கும், தைப்பதற்கும்
- மற்றும் -
மெசின் எம்ராய்டரி, வர்ணம் தீட்டுதல்,
பின்னல் வேலைகள், பொம்மைகள் செய்தல்
பூக்கள் செய்தல், என்பவற்றில் குறுகியகாலத்தில்
பயிற்சி பெறவும்,

★ காலந் தாழ்த்தாது எம்முடன் தொடர்பு கொள்ளவும் ★


G. C. E. தையல் பாடத்துக்குரிய வகுப்பு எம்மால் நடத்தப்படுகின்றது. 14 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கு குறித்த தவணையில் நேர்த்தியாக உடைகள் தைத்துக் கொடுக்கப்படும்.

## ராஜ் தையற் கலாசாலை

பதிவு எண் : 6369


பிரதான வீதி, தெல்லிப்பழை

கலாசாலை அதிபர் S. S. ராஜேஸ்வரி (டிப்ளோமா ஆசிரியை)



சிங்கப்பூரிலே தங்கி தமது கலைத் தொண்டைத் தொடரும் நாச்சிமார் கோவிலடி பழனிவேல் அவர்களை மனப்பூர்வமாக

வாழ்த்துகிறோம்.




திறமைமிக்க
கடைச்சல்
வேலைகட்கு

# காந்தி ஒட்டோ வேக்ஸ்

முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.

உ



## ஸ்ரீ முருகன் பாம்

பல இன மாங்கன்றுகள், எலுமிச்சை
தோடை, மாதுளை,
பலாக்கன்றுகள், விற்பனையாளர்.

ச. சுப்பிரமணியம்
மருதனமடம், சுன்னாகம்.

SRI MURUGAN FARM
Maruthanamadam, Chunnakam.

ஆயர்பாடி சோதிடர் திரு. வே. த. மயில்வாகனம்
கைவண்ணத்தில் உருவாகிய

**பரிதாவி ஆண்டு இராசிப்பலன்**

1972 ம் ஆண்டு சித்திரை தொடக்கம் 1973 ம் ஆண்டு
பங்குனிவரை மாதாந்திரம் பலன்கள் உள்ளது.
ஆயர்பாடி சோதிட நிலையம்
மாவிட்டபுரம் தெல்லிப்பளை

ரசிகர்களுக்கோர் நற்செய்தி!

மணவிழாவா? ஆலய மகோற்சவங்களா? உடனே
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

விபரங்களுக்கு:-

**கண்ணன் மேளக் கோஷ்டியினர்**

மானியம்பதி லேன், மானிப்பாய்
சுதுமலைச் சந்தி மானிப்பாய்

சிறந்த பாத அணிகளை சகாய விலையிற் பெற
இங்கே வாருங்கள்

**மோகன்ஸ்**

கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பளை
MOGANS
K K S ROAD, TELLIPALLAI


★ புகைப் படம் பிடிக்க வேண்டுமா?
★ உடனே எம்மிடம் வாருங்கள்!

**சித்திர கலாஸ் ஸ்டுடியோ**

கே. கே. எஸ். றோட், சுன்னாகம்
CHITRA KALAS STUDIO
K .K . S. Road, Chunnakam

## விஜயேந்திரன்

ஈழத்து இலக்கிய உலகிலே தனித்துவம்மிக்க எழுத்தாளராகவும், 'இலக்கியமே வாழ்வு' என்ற இலட்சிய வெறியுடனும் வீரப்பவனி வருபவர் திரு. **விஜயேந்திரனுவார்.**



சிறுகதை — நாவல் — கவிதை — விமர்சனம் போன்ற எந்தத் துறையிலுமே அவரது பேனு, அசாத்திய சக்தியுடனும், ஆழ்ந்த அறிவுடனும் வண்ணக் கருவூலங்களைத் தீட்டுகிறது.

**விஜயேந்திரனின்** முதல் நூலாகிய கவிதைத்தொகுதி, பிரபல கவிஞர்களாகிய "மஹாகவி", "யாழ்ப்பாணன்", க. சச்சிதானந்தன் போன்ருேரின் பாராட்டுதலைப் பெற்றது.

அவரது "அவள்" நாவலைப் பாராட்டாதவர்களே இல்லை.

அறிஞர் அண்ணு அமரரானபோது விஜயேந்திரன் மின் வேகத்தில் எழுதி வெளியிட்ட "அண்ணு என்ருெரு மானிடன்" நூலும் அனைவரது போற்றுதலுக்கும் இலக்கானது

அவரது "சௌந்தர்ய பூஜை" என்ற உன்னதமான சிறுகதைத் தொகுதி, பொதுமக்களைத் 'திருப்தி' செய்யத் தவறினுலும் ஆழமான இலக்கிய சிந்தனையாளர்களுக்கு அருவிருந்தாக அமைந்தது.

**விஜயேந்திரனின்** "வைகறை" இலக்கிய இதழ், அவரது விமர்சனக் கூர்மைக்கும், நேர்மைக்கும் அழகான சான்ருகப் புலர்ந்தது.

நீங்கள் கையிலேந்தியிருக்கும் "பிரேம தியானம்" நூல் அவரது எழிலும், எடுப்பும் மிக்க மொழி ஆளுகைத் திறனுக்கும், கற்பனை விரிவுக்கும் நேர்த்தியான எடுத்துக்காட்டாகும். எழுத்துலகிற் கட்சி கட்டுகிற பேர்வழிகளின் வலையிற் சிக்காமல், எத்தகைய 'பெரும் புள்ளிகளு'க்கும் குடை பிடிக்காமல் சுய சிந்தனையாலும், சுய ஆற்றலாலும் உயர்ந்துவிட்ட விஜயேந்திரன் ஈழத்து இலக்கிய வானின் வெள்ளி நிலவாவார். —T. பகவதி

அட்டை, சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பெற்றது